ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

அத்திப்பட்டு ஶ்ரீமத் அழகியசிங்கர் அருளிச்செய்த

# ॥ ஶ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் அடைக்கலப்பத்து ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் அடைக்கலப்பத்து ॥

லக்ஷ்மீந்ருஸிம்ஹமநுசிந்த்ய தயாம்புராஶிம்
    லக்ஷ்மீம் ததங்கஸரஸீருஹ ராஜஹம்ஸீம் ।
லக்ஷ்மீசகார நரஸிம்ஹபதப்ரபத்திம்
    யஸ்தம் ஶடாரியதிராஜமஹம் தமீடே ॥

திருமந்திரத் திருப்பதியாம் திருமதுராந்தக நகருள்
    உருவம் தரியரங்கேசச் சடகோபன் தனி அருளால்
திருமந்திர உரை சுரந்த சடகோப யதிபதி செய்
    திருவந்துறை மடியுடையான் அடைக்கலப் பத்திதுவேயாம்

‡மாமலராள் மன்னியுறை மடியுடையான் மஞ்சுறையும்
    மாமலையிற்றனியிலகும் மாகுருவாய் மநுவரத்தை
மாமறையோர் வானவர்க்கும் வழங்கியருள் மாமுனியாம்
    மாமதிசேர் நரசிங்கன் மலரடியை மன்னினனே (1)

பேர்வலிசேர் பொன் பெயரோன் பேருடலைப் பிளந்துகிரால்
    நார்கிழிப்பாரது போல நன்றாகக் கிழித்திட்டுச்
சார்வளை சேரிந்திரையும் தானுமுறை நரசிங்கன்
    பார் புகழும் அடிமலரைப் பணிந்திட்டுப் பாங்கினனே (2)

மறையோனும் மாமதிசேர் மறுசடையனிந்திரனும்
    மறைமுனிவருடன் வந்து மலரதனாலிறைஞ்சி நிற்கக்
குறைமுனிவர் அரம்பையரும் கூடிமறை பாடி நிற்க
    நறைமலராள் உடனுறையும் நம் குருவை அடைந்தேனே (3)

கொள்ளியெழு கோளவுணன் குடல் அலறப்பாய்ந்திட்டுத்
    தள்ளி அவன் தலை காலைத் தனித் தனியே பிரித்திட்டும்
அள்ளி அவன் உதிரத்தை ஆசையுடன் உண்டபிரான்
    வெள்ளியலர் உதிரக்கை வேண்டி வந்து பணிந்தேனே (4)

காரணமாய்க் காரியமாய்க் கண்டிடும் இவ்வுலகத்தில்
பூரணமாய் உறைகின்ற புண்ணியனாம் இவனென்று
நாரணன்றன் மெய்யுருவம் இதுவே என்றனைவர்க்கும்
சீரணிந்து வெளி நின்ற சிங்க குருவடைந்தேனே (5)

‡இங்குளன் அங்குளன் அல்லன் என்றுரைக்கக் கூடாமே
எங்கும் உளன் என் கண்ணன் என்றுரைத்த தன் மகனைக்
குங்குமம் போற்சிவந்த கண்ணன் குருட்டவுணன் உதைத்திட்ட
சங்கணி தூண் பிளந்த பிரான் சதிரடியை அடைந்தேனே (6)

ஓர் உருவே ஈர் உருவாம் என் தனக்குட்கண்ணுடைய
சீர் உருவைச்சிந்தையுளர் சிந்தியுங்கள் எனத்திகழும்
பேர் உருவவிரணியனைப் பிணம்படவே கிழித்துகந்த
ஆர் உருவன் நரசிங்கன் அடியன்றி மற்றிலனே (7)

அஞ்சிறைசேர் அணி பறவை அணைந்திட்ட வடிவுடையான்
அஞ்சிரம் சேர் மணியனந்தன் ஆடியிடுமணிமுடியான்
அஞ்சுருவவவுணனுடல் அஞ்சாறாய்ப் பிளந்திட்ட
நஞ்சுருவன் எம்பெருமான் தமியேனுட்கலந்தானே (8)

‡ஆறும் அவன் பயனும் அவன் அனைத்துலகும் அவனேயாம்
நாறு துழாய் நரசிங்கன் நல்ல மறையுளம் இதுவே
கூறுமதி மதிசேரும் குணமுடைய வெண்மதியோர்
கூறுகின்றார் இப்படியே குணமிதுவே வேதியர்க்கே (9)

‡பத்துருவாய் உலகளித்த பரமன் உருவொன்பதையும்
பத்துருவாய்ப் பணிந்து நின்ற பரம குரு தனி அருளால்
பத்துருவாம் நரசிங்கன் பதக்கமலம் பற்றுமுறை
பத்துருவாம் பாட்டுரைத்துப் பரமபதம் பணிந்தேனே (10)

‡அனைத்துலகும் வாழவந்த ஆதிநரசிங்கன் அடி
தினைத்தனையும் அறவாத சிந்தையுள்ள சடகோபன்
தனத்துறையும் உடையவரும் தாங்குமுரை மாமுனிவன்
மனத்துவைப்பார் ஈரைந்தும் மன்வாழ்வார் இவ்வுலகே (11)

॥ அத்திப்பட்டு ஸ்ரீமத் அழகியசிங்கர் திருவடிகளே சரணம் ॥